# ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, தமிழ்நாடு

**அனுப்புநர்**
மாநில திட்ட இயக்குநர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
சென்னை –6

**பெறுநர்**
முதன்மை கல்வி அலுவலர்கள்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
அனைத்து மாவட்டங்கள்.

**ந.க.எண். 1587/சி7/சிறப்புப் பயிற்சி/ஒபக/2023, நாள்:12.06.2023**

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – தமிழ்நாடு – பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி தலையீடுகள் – சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள் மற்றும் புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள் உட்பட பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகளை அடையாளம் காணுதல், பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்கவைத்தல் – 2023–24 ஆண்டுக்கான வழிகாட்டுதல்கள் – சார்ந்து.

**பார்வை:**

1. மாநில திட்ட இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் (இதுவரை பள்ளியில் சேராத குழந்தைகளைக் கண்டறியும் கணக்கெடுப்பு) ந.க.எண். 2869/சி7/சிறப்புப் பயிற்சி/ஒபக/2022, நாள்: 30.03.2023
2. மாநில திட்ட இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் (புதிய EMIS ID பதிவு செய்தல் சார்ந்த வழிகாட்டுதல்கள்) ந.க.எண். 2869/சி7/சிறப்புப் பயிற்சி/ஒபக/2022, நாள்: 21.04.2023
3. இவ்வியக்ககத்தின் செயல்முறைகள் (மூன்றடுக்கு குழு அமைத்தல்) ந.க.எண். 1587/சி7/சிறப்புப் பயிற்சி/ஒபக/2023, நாள்: 28.04.2023
4. இவ்வியக்ககத்தின் செயல்முறைகள் (தொடர்ந்து கற்போம் திட்டம்) ந.க.எண். 1587/சி7/சிறப்புப் பயிற்சி/ஒபக/2023, நாள்: 12.05.2023

*****

1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் 100% மாணவர் சேர்க்கையை உறுதிப்படுத்துவதற்கான செயல்பாடு, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் முக்கியமான உட்கூறுகளில் ஒன்றான பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி தலையீடுகள் ஆகும். 100% மாணவர் சேர்க்கையை அடைவதற்கு நவீன தொழில்நுட்ப உதவியுடன் கைப்பேசி செயலியும், இணைய பயன்பாடும் உறுதுணை புரிகிறது. மேலும் அரசு அலுவலர்கள், கல்வியாளர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் இல்லம்

தேடிக் கல்வியின் தன்னார்வலர்கள் ஆகியோருடன் இணைந்து பல்வேறு தலையீட்டு செயல்பாடுகள் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகளுக்கான கணக்கெடுப்பின்போது அத்தனை தரவுகளும் கைப்பேசி செயலியில் (Mobile App) உள்ளீடு செய்யப்படுகிறது. அத்தரவுகளுள் இடைநிற்றலுக்கான காரணங்கள் அடிப்படையில், (1) பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் (To be Admitted), (2) மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள் (Non–Target students) என இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு அவை ஒரு பொதுத் தரவு தளத்தில் (Common Pool Data) வைக்கப்படுகின்றது. மேலும், சில காரணங்கள் அடிப்படையில் (3) விவரங்கள் சரி பார்க்கப்பட வேண்டிய மாணவர்கள் (To be Verified) என்ற பிரிவில் **தற்காலிகமாக** வைக்கபடுவார்கள்.

**பொதுத் தரவு தள விவரங்கள் (Common Pool Data):**

பள்ளி செல்லும் வயதில் பள்ளிக்குச் செல்லாத அனைத்து குழந்தைகள் குறித்த விவரங்கள் அடங்கிய தரவுத்தளம்.

(1) **பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் (To be Admitted):**

இடம்பெயர்தல், பொருளாதாரச் சூழல், குடும்பச் சூழல் போன்ற பல காரணங்களால் பள்ளி செல்ல இயலாத குழந்தைகள்.

(2) **பள்ளியில் மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள் (Non–Target students):**

12 ஆம் வகுப்பு முடித்தவர்கள், அதிக வயதை எட்டியவர்கள் (18+ வயதுக்கு மேற்பட்டவர்கள்), ஒரு முறைக்கு மேல் பதிவு செய்யப்பட்டவர்கள், மரணமடைந்துவிட்ட குழந்தைகள் போன்ற காரணங்களால் பள்ளியில் மீண்டும் சேர்ப்பதற்கு எந்த தலையீடு முயற்சியும் தேவையில்லாதவர்கள்.

(3) **விவரங்கள் சரி பார்க்கப்பட வேண்டிய மாணவர்கள் (To be Verified):**

ஐடிஐ, பாலிடெக்னிக் போன்றவற்றில் சேர்ந்திருக்கும் குழந்தைகள், வேறு மாநிலங்களுக்கு, நாடுகளுக்கு இடம் பெயர்ந்தவர்கள் போன்றவர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, விவரங்கள் உண்மையென்றால் அவர்கள் பள்ளியில் மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள் (Non–Target) என்கிற பிரிவிற்கு நகர்த்தப்படுவார்கள். இல்லையெனில், அவர்கள் பள்ளியில் மீண்டும் சேர்க்கப்பட வேண்டிய மாணவர்கள் (To be Admitted) பிரிவில் நகர்த்தப்படுவார்கள்.

ஒரு மாணவர் ஐடிஐ, பாலிடெக்னிக் அல்லது தொழிற்கல்வி நிறுவனங்களில் சேர்ந்திருப்பதாக கணக்கெடுப்பாளர் கண்டுபிடித்தால், அம்மாணவரின் EMIS எண் DoTE மற்றும் DETல் உள்ள EMIS எண்ணோடு பொருந்துகிறதா என சரிபார்க்கப்படும்.

மாணவர்கள் வேறு மாநிலங்களுக்கு/ நாடுகளுக்கு புலம் பெயர்ந்திருப்பது கண்டறியப்பட்டால் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இதற்கான வசதி பெற்றோர் செயலியில் ஏற்படுத்தப்படும்.

**நீண்ட நாட்கள் பள்ளிக்கு வராத மாணவர்களை இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ளதாக கண்டறிந்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்**

EMIS தளத்தில் கீழ்கண்ட நிரல்களில் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**இச்செயல்பாடுகள் பள்ளி திறக்கப்படும் முதல் நாளிலிருந்தே தொடங்கப்பட வேண்டும்.**

பள்ளிகளில் சேர்ந்த மாணவர்கள்,

1. **ஒரு வாரத்தில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள்** மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், அம்மாணவர்களின் விவரப்பட்டியல் **தலைமையாசிரியரின்** EMIS தளத்தில் காண்பிக்கப்படும். தலைமையாசிரியர் மாணவர் வருகை புரியாமைக்கான காரணத்தை பதிவு செய்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
2. **இரண்டு வாரத்தில் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள்** மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், **வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநரின்** EMIS தளத்தில் அம்மாணவர்களின் விவரப்பட்டியல் காண்பிக்கப்படும். ஆசிரியர் பயிற்றுநர் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
3. **மூன்று வாரத்தில் ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள்** மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், **மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின்** EMIS தளத்தில் அம்மாணவர்களின் விவரப்பட்டியல் காண்பிக்கப்படும். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
4. **30 நாட்களில் 15 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள்** மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், **மாவட்ட ஆட்சியர்** மற்றும் **மாநில அளவில்** கண்காணிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், இவ்விவரங்கள் **பள்ளி மேலாண்மைக் குழு** உறுப்பினர்களுக்கு பெற்றோர் செயலியில் காண்பிக்கப்படும்.
5. **நான்கு வாரத்திற்கு பிறகும்** தொடர்ந்து மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், தலைமையாசிரியர் பொதுத் தரவு தள விவரப் பட்டியலில் (Common Pool Data) அம்மாணவர்களை காரணத்தை குறிப்பிட்டு சேர்க்கலாம்.

**இதுவரை பள்ளியில் சேராத குழந்தைகள் (Never Enrolled children)**

இதுவரை பள்ளியில் சேராத பள்ளி வயது குழந்தைகளை (மாற்றுத்திறனுடைய குழந்தைகள் மற்றும் இடம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் உட்பட) கணக்கெடுப்பின் மூலம் கண்டறிய வேண்டும். அக்குழந்தைகளை வயதுகேற்ற வகுப்பில் அருகாமை பள்ளிகளில் சேர்க்க வேண்டும். இத்தரவுகளை கணக்கெடுப்பு செயலியில் தவறாது பதிவு செய்தல் வேண்டும்.

**மாவட்ட அளவிலான மூன்றடுக்கு குழு (3 Tier Committee)**

6–18 வயதுடைய பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகள் (மாற்றுத்திறனுடைய குழந்தைகள் மற்றும் இடம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் உட்பட) மற்றும் இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ள குழந்தைகள் (Potential Dropout) கண்டறிந்து மீள பள்ளியில் சேர்க்க பிற துறைகளின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு அவசியமாகிறது. இதனடிப்படையில் அனைத்து மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மூன்றடுக்கு குழு (பள்ளியளவில், வட்டார அளவில் மற்றும் மாவட்ட அளவில்) அமைக்கப்பட்டு

வழிகாட்டுதல்களில் கூறப்பட்டபடி முறையாக் கூடி அக்குழுக்கள் கீழ்கண்ட கால அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அனைத்து செயல்பாடுகளையும் கண்காணித்து தேவைப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**2023–24 கல்வியாண்டிற்கான செயல்பாடுகளின் கால அட்டவணை**

**ஜூன் – ஜூலை 2023:**

- 100% மாணவர் சேர்க்கைக்காக, குறிப்பாக 5+ வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை பள்ளியில் சேர்க்க தனிக் கவனம் மேற்கொள்ளுதல்.
- இதுவரை பள்ளியில் சேராத குழந்தைகளைக் (Never Enrolled) கண்டறிந்து, பள்ளியில் சேர்த்தல். அதனுடன் தற்போது பள்ளியில் சேர்க்கவேண்டிய மாணவர்களின் பட்டியலில் உள்ளவர்களை சிறப்பு முயற்சிகள் மேற்கொண்டு மீண்டும் பள்ளியில் சேர்த்தல்.
- 5, 8, 10ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் அனைவரும் அடுத்த வகுப்பில் சேர்க்கப்பட்டுவிட்டதை உறுதிப்படுத்துவதன் மூலம் இடைநிற்றலை தவிர்த்தல்.
- 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்விற்கு வருகை புரியாத மற்றும் தேர்வில் தேர்ச்சி பெறாத அனைத்து மாணவர்களும் துணைத் தேர்வு எழுதுவதை உறுதி செய்தல்.
- இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ள மாணவர்களைக் (Potential Dropouts) கண்டறிந்து கண்காணிப்பதை தொடங்குதல்.
- பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுக் கூட்டங்கள் அனைத்து நிலைகளிலும் நடைபெறுதல்.

**ஆகஸ்ட் – செப்டம்பர் 2023:**

- பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகள் கணக்கெடுப்பு செயலியின் மூலம் தொடங்குதல்.
- ஆசிரியர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள், சிறப்பாசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள், முன்னாள் மாணவர்கள் உட்பட அனைத்து கணக்கெடுப்பாளர்களும் பொதுத் தரவு தளத்தில் உள்ள அனைத்து மாணவர்களையும் கண்டறிந்து, அவர்களின் வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் அருகாமையிலுள்ள பள்ளிகளில் சேர்த்தல்.
- பள்ளியில் மீண்டும் சேர்க்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான அனைத்து பொருட்களை வழங்குதல் மற்றும் பல்வேறு நலத்திட்டங்கள் மூலமாக வழங்கப்படுகின்ற அனைத்து பொருள்களும் குழந்தைகளுக்கு பள்ளி நிர்வாகம் மூலம் வழங்குதலை உறுதிப்படுத்துதல்.
- பள்ளியில் மீண்டும் சேர்க்க தேவையில்லாத மாணவர்கள் என கள ஆய்வு மூலம் கண்டறியப்பட்டவர்கள் DOTE, DET போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட விவரங்களைக் கொண்டு அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்துதல்.
- சம்பாதிக்க வேண்டிய கட்டாயம், உடல் நலப் பிரச்சனைகள், சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள், குழந்தைத் திருமணம், கண்டுபிடிக்க இயலவில்லை அல்லது தொடர்பு

கொள்ள முடியவில்லை போன்ற அனைத்து காரணங்களால் இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்க்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

- 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளின் காலாண்டு தேர்வில் மாணவர்கள் வருகையை உறுதி செய்து கண்காணித்தல்.
- பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுக் கூட்டங்கள் அனைத்து நிலைகளிலும் நடைபெறுதல்.

அக்டோபர் 2023:

- சம்பாதிக்க வேண்டிய கட்டாயம், உடல் நலப் பிரச்சனைகள், சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள், குழந்தைத் திருமணம், இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களுக்குச் சென்றது, கண்டுபிடிக்க இயலவில்லை அல்லது தொடர்புகொள்ள முடியவில்லை போன்ற அனைத்து காரணங்களால் இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்க்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுவது தொடருதல். இடைநின்றவர்களின் பட்டியலில் ஒருவர் கூட இல்லாதவரை, இம்முயற்சி தொடர வேண்டும்.
- பள்ளியில் மீண்டும் சேர்க்கப்பட்ட குழந்தைகள் தங்களை பள்ளி சூழலில் தகவமைத்துக் கொண்டுள்ளதை உறுதிசெய்தல்.
- பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுக் கூட்டங்கள் அனைத்து நிலைகளிலும் நடைபெறுதல்.

நவம்பர் 2023:

- சம்பாதிக்க வேண்டிய கட்டாயம், உடல் நலப் பிரச்சனைகள், சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள், குழந்தைத் திருமணம், இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களுக்குச் சென்றது, கண்டுபிடிக்க இயலவில்லை அல்லது தொடர்புகொள்ள முடியவில்லை போன்ற அனைத்து காரணங்களால் இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்க்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுவது தொடருதல். இடைநின்றவர்களின் பட்டியலில் ஒருவர் கூட இல்லாதவரை, இம்முயற்சி தொடர வேண்டும்.
- பொதுத் தேர்விற்கு வருகை புரியாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களில் நீண்ட நாட்கள் பள்ளிக்கு வராதவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்துதல்.
- பள்ளியில் மீண்டும் சேர்க்கப்பட்ட குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் தக்கவைப்பதை உறுதிசெய்தல்.
- பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுக் கூட்டங்கள் அனைத்து நிலைகளிலும் நடைபெறுதல்.

டிசம்பர் 2023:

- பொதுத் தேர்விற்கு வருகை புரியாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களில் நீண்ட நாட்கள் பள்ளிக்கு வராதவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்துதல்.

- 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளின் அரையாண்டு தேர்வில் மாணவர்கள் வருகையை உறுதி செய்து கண்காணித்தல்.
- பள்ளியில் மீண்டும் சேர்க்கப்பட்ட குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் தக்கவைப்பதை உறுதிசெய்தல்.
- பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுக் கூட்டங்கள் அனைத்து நிலைகளிலும் நடைபெறுதல்.

**ஜனவரி – மார்ச் 2024:**

- பொதுத் தேர்விற்கு வருகை புரியாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களில் நீண்ட நாட்கள் பள்ளிக்கு வராதவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்துதல்.
- பருவக்கால இடம்பெயரும் நாடோடிக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தி பள்ளியில் மீண்டும் சேர்வதை உறுதி செய்தல்.
- பள்ளியில் மீண்டும் சேர்க்கப்பட்ட குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் தக்கவைப்பதை உறுதிசெய்தல்.
- பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுக் கூட்டங்கள் அனைத்து நிலைகளிலும் நடைபெறுதல்.

**ஏப்ரல் 2024:**

- இந்த ஆண்டு முழுவதும் பள்ளி செல்லாக் குழந்தைகள் தொடர்பாக நடந்தவை அனைத்து நிகழ்வுகளை தொகுத்தல், ஆராய்தல் மற்றும் கண்டறிதல்.
- இதுவரை பள்ளியில் சேராத குழந்தைகளைக் (Never Enrolled) கண்டறிந்து, பள்ளியில் சேர்த்தல்.
- பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுக் கூட்டங்கள் அனைத்து நிலைகளிலும் நடைபெறுதல்.

**மே 2024:**

- அடுத்த ஆண்டிற்கான திட்டங்களை வகுத்தல் மற்றும் இந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த தரவுகளை ஆராய்தல்.
- இதுவரை பள்ளியில் சேராத குழந்தைகளைக் (Never Enrolled) கண்டறிந்து, பள்ளியில் சேர்த்தல்.
- பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுக் கூட்டங்கள் அனைத்து நிலைகளிலும் நடைபெறுதல்.

### பங்குதாரர்களின் பொறுப்புகள்

| பங்குதாரர் | பங்கும் பொறுப்புகளும் |
|---|---|
| **மாவட்ட ஆட்சியர்கள்** | • பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகளுக்கான மூன்றடுக்கு குழு அமைத்து அதைச் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.<br>• மாவட்ட ஆட்சியர்களுக்கான முகப்பு பக்கத்திலுள்ள இதுவரை பள்ளியில் சேராத குழந்தைகள், பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகள் மற்றும் இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ள குழந்தைகள் சார்ந்த தரவுகள்/ அறிக்கைகளைப் பார்த்து, அதனடிப்படையில் பிற துறைகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **மாநில EMIS குழு** | • பள்ளியில் சேர்க்கத் தேவையில்லாத மாணவர்களை கீழ்க்கண்ட காரணங்களின் அடிப்படையில் அடையாளம் கண்டு பொதுத் தரவு தளத்திலிருக்கும் தகவல்களை சரிபார்த்து துல்லியமாக்குதல்:<br>○ ஒரு முறைக்கு மேல் சேர்க்கைப் பதிவு<br>○ பிற மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் நாடுகளுக்கு குடிபெயர்ந்துவிட்ட மாணவர்கள் (பள்ளி மேலாண்மைக் குழுவால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்)<br>○ தொழிற்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் (சார்ந்த துறைகளால் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்)<br>• 2023-24 கல்வியாண்டிற்கான செயல்பாடுகளின் கால அட்டவணையின்படி தேவைப்படும் அனைத்து அறிக்கைகளும் சார்ந்த பங்குதாரர்களின் EMIS தளத்தில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். |
| **மாநிலக் OoSC குழு** | • அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (OoSC), உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு (தேவைப்படின்) வாரத்தில் ஒரு முறை மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.<br>• கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் மாநில திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலாளரிடம் (மாதிரிப் பள்ளிகள்) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>• 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் மற்றும் அடுத்த வகுப்புகளுக்குச் செல்லும் குழந்தைகள் (5, 8, 10ஆம் வகுப்பு முடித்தவர்கள்) ஆகியோரை பள்ளியில் சேர்ப்பதை ஜூலை |

| | |
|---|---|
| | மாதம் வரையில் இந்த மீளாய்வுக் கூட்டங்களின் முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும்.<br>• ஆகஸ்டு–செப்டம்பர் மாதத்திலிருந்து கள ஆய்வு தொடங்கி நடத்தப்பட்டு, "பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய மாணவர்கள்" பட்டியலில் குறிக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்ப்பது குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.<br>• மூன்றடுக்கு அமைப்பு குழுக் கூட்டங்கள் அனைத்து மாவட்டங்களில் நடைபெறுவதை கண்காணித்து உறுதி செய்தல் வேண்டும்.<br>• 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு துணைத் தேர்விற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.<br>• 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் காலாண்டு, அரையாண்டு மற்றும் மாதிரித் தேர்வுகளின் வருகைப் பதிவினை கண்காணிக்க வேண்டும். |
| **மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (OoSC) மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (IE)** | • 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு துணைத் தேர்விற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.<br>• மூன்று வாரத்தில் ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளக்கு வரவில்லை எனில், EMIS தளத்தில் அம்மாணவர்களின் விவரப்பட்டியலை கண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>• பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுக் கூட்டங்கள் அனைத்து நிலைகளிலும் நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.<br>• 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் காலாண்டு, அரையாண்டு மற்றும் மாதிரித் தேர்வுகளின் வருகைப் பதிவினை கண்காணிக்க வேண்டும்.<br>• முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையில் மாவட்ட வாரியான மீளாய்வுகளை நடத்துதல் மற்றும் மாவட்டத்தில் உள்ள வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்/ வட்டாரக் கல்வி அலுவலர்/ மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் தொகுதி ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றுதல் வேண்டும்.<br>• மாணவர்களை மீண்டும் பள்ளிகளில் சேர்ப்பதில் மாநிலத் தலைமையின் உத்தியைப் பின்பற்றி, மாவட்டத்திற்குள் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| | • பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்கள் குறித்த அறிக்கைகளை கவனமாகக் கையாளவும், ஒவ்வொரு விவரமும் துல்லியமாக இருப்பதையும், கணக்கெடுப்பு செயல்பாடு அனைத்து மாணவர்களை சென்றடைவதையும் கவனமாக உறுதிப்படுத்த வேண்டும்.<br>• மாநில அளவிலான கூட்டத்தில் கலந்து கொண்டு, நடவடிக்கைகளை தானாக முன்வந்து செயல்படுத்த வேண்டும். |
| **மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (EMIS)** | • மாவட்ட பொதுத் தரவு தளத்தைக் குறித்து விரிவான அறிக்கைகளை உருவாக்கி, பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய மாணவர்களை கண்டறிய மாவட்டக் குழுவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். OoSC பகுப்பாய்வு அறிக்கை (Analytical reports) முதன்மைக் கல்வி அலுவலருக்கு சமர்பிக்க வேண்டும்.<br>• மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 100% வருகைப் பதிவு குறிக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்து, வருகைப் பதிவை குறிக்கத் தவறிய பள்ளிகளை உன்னிப்பாகக் கண்காணிக்கவும் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>• வருகைப் பதிவு குறிப்பதில் சீரற்ற பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுடன் தொடர்ந்து சந்திப்புகளை நடத்த வேண்டும்.<br>• 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் காலாண்டு, அரையாண்டு மற்றும் மாதிரித் தேர்வுகளின் வருகைப் பதிவினை கண்காணிக்க வேண்டும். |
| **மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (SMC)** | • அனைத்து பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டங்களில் அவர்கள் பள்ளியிலுள்ள பள்ளி செல்லா/ இடைநின்ற மற்றும் இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ள மாணவர்களைக் குறித்து விவாதித்து பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.<br>• பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான கணக்கெடுப்பின்போது மாணவர்கள் வேறு மாநிலங்களுக்கு/ நாடுகளுக்கு புலம் பெயர்ந்திருப்பது கண்டறியப்பட்டால் அதை பள்ளி மேலாண்மைக் குழு பெற்றோர் செயலியில் சரிபார்ப்பதை உறுதி செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| **உதவித் திட்ட அலுவலர் (மாவட்டத் திட்ட அலுவலகம்) மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்** | • பொது தரவுத் தளத்தில் உள்ள மாணவர்களை கண்காணித்து தரவுகளின் அடிப்படையில் நடவடிக்கைளை எடுக்க வேண்டும்.<br>• மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள், தலைமை ஆசிரியர்கள் ஆகியோருடன் மாவட்ட அளவிலான கூட்டங்களை நடத்தி மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்கான செயல்பாடுகளை திட்டமிட வேண்டும்.<br>• பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுக் கூட்டங்கள் அனைத்து நிலைகளிலும் நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.<br>• உதவித் திட்ட அலுவலர்கள் மாநில அளவிலான கூட்டத்தில் கலந்து கொண்டு, நடவடிக்கைகளை தானாக முன்வந்து செயல்படுத்த வேண்டும்.<br>• 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் காலாண்டு, அரையாண்டு மற்றும் மாதிரித் தேர்வுகளின் வருகைப் பதிவினை கண்காணிக்க வேண்டும். |
| **வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள்** | • வீடு வீடாகச் சென்று நடத்தப்படும் கணக்கெடுப்புகளிலும், அதைத் தொடர்ந்து கள அளவிலான நடவடிக்கைகளிலும், தரவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உத்திகளை பின்பற்றவும் முக்கியப் பங்குதாரராகத் தலைமை வகிக்க வேண்டும்.<br>• வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள தங்கள் வட்டாரத்துக்குள் உள்ள ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களை தயார் செய்ய வேண்டும்.<br>• கைப்பேசி செயலியின் உட்கூறுகள் மூலம் வழங்கப்பட்ட தரவின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை சரிபார்க்க வேண்டும்<br>• இரண்டு வாரத்தில் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை எனில், EMIS தளத்தில் அம்மாணவர்களின் விவரப்பட்டியலை கண்டு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.<br>• ஒரு வாரத்தில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் பள்ளிக்கு வராத மாணவர்களுக்கு EMIS தளத்தில் தலைமையாசிரியர் மாணவர் வருகை புரியாமைக்கான காரணத்தை பதிவு செய்தார்களா என்பதை உறுதி செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| | • 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு துணைத் தேர்விற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும். |
| **தலைமையாசிரியர்** | • வீடு வீடாகச் சென்று நடத்தப்படும் கணக்கெடுப்புகளிலும், அதைத் தொடர்ந்து கள அளவிலான நடவடிக்கைகளிலும், தரவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உத்திகளை பின்பற்றவும் முக்கியப் பங்கேற்பாளர்களாக தலைமை வகிக்க வேண்டும்.<br>• கைப்பேசி செயலியின் உட்கூறுகள் மூலம் வழங்கப்பட்ட தகவலின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை சரிபார்க்க வேண்டும்<br>• அடுத்த வகுப்பில் இணையும் மாணவர்களின் (5, 8, 10 ஆம் வகுப்பு முடித்தவர்கள்) இருப்பை உறுதிப்படுத்த வேண்டும்.<br>• ஒரு வாரத்தில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை எனில், EMIS தளத்தில் அம்மாணவர்களின் விவரப்பட்டியலைக் கண்டு, அவர்கள் பள்ளிக்கு வருகை புரியாமைக்கான காரணத்தை பதிவு செய்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.<br>• நான்கு வாரத்திற்கு பிறகும் தொடர்ந்து மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், தலைமையாசிரியர் பொதுத் தரவு தள விவரப் பட்டியலில் அம்மாணவர்களை காரணத்தை குறிப்பிட்டு சேர்க்கலாம்.<br>• 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு துணைத் தேர்விற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.<br>• 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் காலாண்டு, அரையாண்டு மற்றும் மாதிரித் தேர்வுகளின் வருகைப் பதிவினை கண்காணிக்க வேண்டும். |
| **ஆசிரியர்கள்** | • தங்கள் வகுப்புகளில் வருகைப் பதிவை 100% குறிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.<br>• வீடு வீடாகக் கணக்கெடுப்பு நடத்தி இதுவரை பள்ளியில் சேராத மாணவர்களைக் கண்டறிவது மற்றும் மாணவர்கள் இடைநின்ற காரணத்தைத் துல்லியமாகக் குறிக்க வேண்டும்.<br>• வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் நடவடிக்கை முயற்சிகளை ஒருங்கிணைத்துத் துணை நிற்க வேண்டும். |

| | |
|---|---|
| | • 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு துணைத் தேர்விற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும். |
| **பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள்** | • பிற மாவட்டங்கள், மாநிலங்கள், நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ள மாணவர் விவரங்களை முறையாக விசாரணை செய்து பெற்றோர் செயலியில் உறுதிப்படுத்த வேண்டும்.<br>• குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற மிக சிக்கலான காரணங்களுக்காக இடைநின்ற மாணவர்களுக்கான தலையீட்டு முயற்சிகளில் துணை நிற்க வேண்டும்.<br>• பெற்றோர் செயலியில் காண்பிக்கப்படும் இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ள மாணவர்கள் மீது குறிப்பான கவனம் செலுத்தி தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.<br>• 5 வயதிற்கு மேற்பட்ட அனைத்துக் குழந்தைகளும் தங்கள் குடியிருப்புக்கு அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்பட்டதை உறுதி செய்ய வேண்டும்.<br>• 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு துணைத் தேர்விற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் தங்கள் பள்ளியில் நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.<br>• பள்ளி செல்லா/ இடைநின்ற மாணவர்களுக்கான மூன்றடுக்கு குழுவின் பள்ளி அளவிலான குழுக் கூட்டங்களில் பங்கேற்க வேண்டும். |
| **இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள்/ முன்னாள் மாணவர்கள்** | • குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்கு மற்றும் தொடர்ந்து பள்ளி செல்வதற்கு மாவட்ட அளவிலான நடவடிக்கைகளுக்கு துணை நிற்க வேண்டும். |

முதன்மை கல்வி அலுவலர்கள் அனைவரும் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்றி, பள்ளியில் சேராத/ இடைநின்ற மாணவர்களே இல்லாத நிலையை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்து தங்கள் மாவட்டங்களில் 100% பள்ளிச் சேர்க்கையை உறுதிப்படுத்த வேண்டும்.

12/6/23

**மாநில திட்ட இயக்குநர்**

12/6/23